சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.13.09.2023

OS.No. 407/2018

DW1: திரு.விஜயசிம்மன் (வயது 37) த/பெ. ஜெயபாலன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆண்டியப்பன், சின்னம்மாள் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் எனது தாத்தாவின் அப்பா மற்றும் அம்மா ஆகும் . ஆண்டியப்பன், சின்னம்மாள் தம்பதிக்கு அங்கப்பன், ஆறுமுகம், ராமையா ஆகியோர் குழந்தைகள் என்றால் சரிதான் . ராமையா என்பவருக்கு ஜெயபாலன், தனபாலன், சந்திரா, பூங்கோதை, இளங்கோவன் ஆகியோர் குழந்தைகள் ஆகும் . இளங்கோவன் திருமணத்திற்கு முன்பே இறந்துவிட்டார். தனபாலன் அவருடைய மனைவி சம்பூரணத்தை விட்டுவிட்டு இறந்துவிட்டார் அவர்களுக்கு குழந்தைகள் இல்லை . எனது அப்பா ஜெயபாலனுக்கு தனலெட்சுமி , கல்யாணி என்ற இரண்டு மனைவிகள். தனலெட்சுமி இறந்த பிறகு கல்யாணியை திருமணம் செய்து கொண்டார். ஜெயபாலன், தனலெட்சுமி தம்பதியருக்கு ஜெயசிம்மன் , ராஜசிம்மன் ஆகிய இரண்டு மகன்கள் என்றால் சரிதான் . ஜெயபாலன், கல்யாணி தம்பதியருக்கும் நானும் , காயத்திரி என்ற மகளும் வாரிசாகும் . ஆறுமுகமும், அங்கப்பனும் பிழைப்பிற்காக வெளியூர் சென்றுவிட்டார்கள் என்றால் ஆறுமுகம் மட்டும் தான் வெளியூர் சென்றார் . அங்கப்பன் தன் மனைவி உடன் தாவா சொத்தில் வசித்து வந்தார் . எந்த வருடம் முதல்

அங்கப்பன் தாவா சொத்தில் வசித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது . ஆறுமுகம், அங்கப்பன், ராமையா அவர்களுக்குள் வாய்கரரான பாக பிரிவினை ஏற்பட்டு ஆறுமுகமும் அங்கப்பனும் வெளியூரில் இருந்ததால் ராமையா வழக்கு சொத்தில் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்தார் என்றால் அது சரியல்ல. வழக்கு சொத்து பூர்விக சொத்து என்றால் அது சரியல்ல . அங்கப்பனுக்கு இந்த வழக்கு சொத்து எப்படி வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . ஆண்டியப்பன் சின்னம்மாள் தம்பதியருக்கு மூன்று குழந்தைகள் இருக்கும் போது அங்கப்பனுக்கு மட்டும் எப்படி அந்த சொத்து வந்தது என்றால் அங்கப்பன் , ராஜாத்தி ஆகியோர் அனுபவ பாத்தியத்தின் அடிப்படையில் அந்த இடத்தில் வீடு கட்டி வாழ்ந்து வந்தார்கள் . அது சம்மந்தமாக அங்கப்பனின் இபி ரசீது , குடிநீர் வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

/signed/
விஜயசிம்மன்

/signed/
திரு.S.விஜயகுமார், M.A., M.L.,
சார்பு நீதிபதி, இலால்குடி.